**தமன பிரதேச சபை**
**அம்பாறை மாவட்டம்**

-----------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 05 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 28 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தமன பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலுவை வருமான பதிவேட்டிற்கமைய நிலுவையாகவிருந்த வாடகை ரூபா 393,147 ஆன போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 403,902 ஆக காண்பிக்கப்பட்டிருந்தமையால், வருமானமானது ரூபா 10,755 இனால் அதிகரித்துக் காணப்பட்டிருந்தது.

(ஆ) ஹிந்தகலுகம வீதிக்கு கொன்கிறீட் இடுவதற்காக சுகாதார அமைச்சிடமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 150,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ரூபா 2.5 மில்லியனான தொழிற்சாலைக் கடன் கொடுத்தோர் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான 02 படகுகள் மற்றும் வள்ளமொன்றை வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கியமைக்காக பெற வேண்டியிருந்த வருமானமான ரூபா 469,000 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 செலுத்த வேண்டிய கணக்குகள்**

2010 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தும் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 363,800 கூட்டுத்தொகையான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகள் 02 இனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

தேவையான தகவல்களை சமர்ப்பிக்காமையால் ரூபா 233,722 கூட்டுத்தொகையான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.4 இணங்காமைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 150(4) ஆம் பிரிவு | 83,750 | கடந்த வருடம் முதல் கணக்குகளில் காண்பிக்கப்பட்டுள்ள நிலுவை வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் விதி 180 மற்றும் 181 | -- | சபையின் வருமான சேகரித்தல், களஞ்சிய நிர்வாகம், காசோலைகளை வெளியிடல் போன்ற கடமைகளுக்குரிய உத்தியோகத்தர்களால் பிணைப் பணம் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | நிதிப்பிரமாணம் 104 மற்றும் நிதிப்பிரமாணம் 105 | -- | சபைக்குச் சொந்தமான கெப் வண்டியொன்று 2009 நவம்பர் 17 ஆம் திகதி விபத்தொன்றிற்கு உள்ளான பின்னர் பழுதுபார்த்தலுக்காக தனியார் கராஜ் ஒன்றிற்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் இந்த பதவிகள் தொடர்பில் முறையான விசாரணையொன்று மேற்கொண்டு அதன் அளவு மற்றும் காரணங்களை திட்டவட்டமாக அறிந்துக் கொள்ளலும், அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்களை உறுதிப்படுத்தல் மற்றும் நிதிப்பிரமாணம் 105 இன் பிரகாரம் நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பில் அறவிடக்கூடிய ஆகக்கூடிய பெறுமதிகள் தீர்மானிக்கப்பட வேண்டிய போதிலும், சபையினால் அதற்கு முரணாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய அரச நிர்வாகச் சுற்றறிக்கை 30/2016 | - | சபைக்கு சொந்தமான 04 வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான பிரதேச சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,941,878 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,499,342 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2016 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 420,906 | 420,907 | 87,672 | 1,711,451 | 420,000 | 420,906 | 284,300 | 1,378,839 |
| (ii) | வாடகை | 472,626 | 2,975,376 | 3,038,364 | 403,902 | 2,586,626 | 493,626 | 2,696,134 | 537,330 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,222,184 | 1,345,000 | 1,630,654 | 83,750 | 1,570,400 | 509,330 | 1,558,340 | 83,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 3456,983 | 1,222,500 | 258,091 | 1,415 | 3,390,832 | 3,869,345 | 195,853 | 1,415 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

சபையினால் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக அறவிடப்பட வேண்டிய மொத்த வருமானம் ரூபா 7,574,033 ஆக இருந்ததுடன், ஆண்டினுள் ரூபா 5,014,781 அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய வருமானம் சேகரித்தல் 66 சதவீதமான மட்டத்தில் நிலவுவதாக அவதானிக்கப்பட்டது.

#### 2.2.3 வீதவரியும் வரியும்

2007 ஆம் ஆண்டின் ஆதன வரி மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போதும் ஆதன வரி அறவிடல் மேற்கொள்ளப்பட்டிருந்தது. ஆதன வரி பதிவேட்டின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி ரூபா 1,480,601 ஆக இருந்ததுடன் நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக நடவடிக்கைகளை எடுத்திருக்கவில்லை.

**2.3.4 வாடகை**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான நிலுவை வாடகை வருமானமான ரூபா 403,902 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.5 அனுமதிப்பத்திர கட்டணம்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் காணப்பட்ட செலுத்தப்படாத அனுமதிப் பத்திரக் கட்டணங்களான ரூபா 83,750 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.6 ஏனைய வருமானம்**

சபையின் அதிகாரப்பிரதேசத்தில் 12 தொலைபேசிக் கோபுரங்கள் காணப்பட்டதுடன், 2009 ஏப்ரல் 19 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க வர்த்தமானிக்கமைய, தொலைபேசிக் கோபுரங்களுக்காக ஆகக் குறைந்தது கோபுரமொன்றிற்காக ரூபா 20,000 படி ரூபா 240,000 தொகையான அடிப்படைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

**2.2.7 முத்திரைக் கட்டணம்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பதிவாளர் நாயகத்தின் முத்திரைக் கட்டணமாக ரூபா 132,150 தொகை பெற வேண்டியதாக காணப்பட்டது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 கைவிடப்பட்ட பணிகள்**

கடந்த வருடத்தினுள் 02 பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, அதற்காக ரூபா 1,480,667 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் எதிர்பார்த்த பெறுபெறுகளை பெற்றுக்கொள்ளாது, அந்த பணி கைவிடப்பட்டிருந்தது.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சிறுவர் பூங்காவினை வாரச் சந்தை பூமியில் அமைக்கப்பட்டுள்ளதுடன், வாரச்சந்தை நடாத்தப்பட்டதன் பின்னர் சிறுர் பூங்கா பயன்பாட்டிற்கு எடுக்க முடியாத நிலைக்கு உள்ளாவதாக அவதானிக்கப்பட்டது. ரூபா 3.3 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த இந்த சிறுவர் பூங்காவினை நிர்மாணிக்கும் போது இந்த பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படாமை இவ்வாறான நிலைமை ஏற்படுவதற்கான காரணமாக அமைந்திருந்தது.

(ஆ) மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சிறுவர் பூங்காவில் ரூபா 1.8 மில்லியன் பெறுமதியான விளையாட்டு உபகரணங்கள் பொருத்தப்பட்டிருந்த போதிலும், அவற்றின் பாதுகாப்பினை போன்ற அதன் பராமரிப்பு பணிகளுக்கு பொருத்தமான பொறுப்பு

வாய்ந்த நபரொருவர் நியமிக்கப்பட்டிராமையால், விளையாட்டுத்திடலின் நிலைத்த தன்மை நிச்சியமற்ற நிலையில் காணப்பட்டது.

(இ) 2016 ஆகஸ்ட் மாதத்தின் போது சபையினால் ரூபா 254,292 தொகை செலவிடப்பட்டு மீன் மற்றும் இறைச்சி விற்பனை செய்வதற்கு ஹிங்குரான வாரச்சந்தை வளாகத்தில் கடைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள போது, வாரச்சந்தை வளாகத்தின் போது வேறு இடங்களில் மீன் மற்றும் இறைச்சி விற்பனை மேற்கொள்ளப்படுகின்றமையை காணக்கூடியதாக இருந்ததுடன், இது தொடர்பில் சபையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்கு சொந்தமான 07 வாகனங்களுக்கான வருமான அனுமதிப்பத்திரங்கள் உரிய வருடத்தில் பெற்றுக்கொள்ளப்படாமையால், தண்டப் பணமாக முறையே ரூபா 4,190 மற்றும் ரூபா 5,000 தொகை 2016 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் செலுத்தப்பட்டிருந்தது.

(உ) சபைக்கு சொந்தமான 02 வள்ளங்கள் 2009 நவம்பர் 13 ஆந் திகதி இரு நபர்களுக்கு ரூபா 1,500 படியான மாதாந்த வாடகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக சபைக்கு கிடைக்க வேண்டிய வாடகையான ரூபா 291,000 தொகையினை அறவிடுவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). இந்த 02 வள்ளங்களையும் வாடகைக்கு வழங்குவதற்குரியதாக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கைகளில் இரு சாட்சியாளர்கள் மற்றும் சபையின் தலைவர் கையொப்பமிட்டிராமையால், வாடகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

(iii). வாடகை உடன்படிக்கைக்கமைய உரிய வாடகையை செலுத்தல் புறக்கணிக்கப்படுமாயின் இந்த வள்ளங்கள் சபைக்கு கையேற்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சுவீகரித்தல் இடம்பெற்றிருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக பதவியணியின் 08 பதவிகளுக்காக 10 வெற்றிடங்கள் நிலவின.

(ஆ) சபைக்கு சொந்தமான ஹிங்குரான உடல் வலுவூட்டல் நிலையத்திற்காக இரு உத்தியோகத்தர்கள் இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன், அவர்களுள் ஒருவர் அம்பாறை நகர சபையிலிருந்து ஒரு நாள் விடுக்கப்பட்டுள்ள போதிலும், ஆட்சேர்க்கப்பட்ட மற்றைய ஊழியர் முறையான ஆட்சேர்ப்பு நடைமுறையிலிருந்து விலகி இணைத்துக்கொள்ளப்பட்டு சம்பளங்கள் செலுத்தப்பட்டிருந்தது.

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

ஹிங்குரானையில் அமைந்துள்ள 13 கடைகளின் 08 கடைகள் குத்தகை உடன்படிக்கைக்கு முரணாக 17 வருட காலமாக இடைக்குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

---

**3.5.1 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்கு சொந்தமான பழுதுபார்க்கப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட 05 வாகனங்கள் நீண்ட காலமாக பழுதுபார்க்கப்படாமல் பழைய சபைக் கட்டிட வளாகத்தில் தரித்து வைக்கப்பட்டிருந்தது. அந்த வாகனங்களை பழுதுபார்த்தல் அல்லது கைத்தவிர்த்தல் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் பராமரிக்கப்படும் தமன மற்றும் மடவலந்த விளையாட்டுத் திடல்கள் இரண்டும் புற்கள் அடர்ந்து காணப்பட்டதுடன், விளையாட்டுத் திடல்களில் பெயர்ப்பலகைகள் பொருத்தப்பட்டிருக்கவில்லை.

**3.5.2 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் கிடைக்காமை**

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) ஹிங்குரானயில் அமைந்துள்ள 13 கடைகளில் 06 கடைகள் மற்றும் முவங்கலையில் அமைந்துள்ள 12 கடைகளில் 03 கடைகளும் 01 முதல் 15 வருடங்கள் வரையான காலமாக மூடப்பட்டிருந்ததுடன், அறவிடப்பட வேண்டிய ரூபா 220,239 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு அல்லது அந்த கடைகளை மீளச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்கு சொந்தமான வள்ளமொன்று 2010 யூலை 28 ஆந் திகதி நபரொருவருக்கு ரூபா 2,000 தொகையான மாதாந்த வாடகையின் அடிப்படையில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i). மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 178,000 தொகையான வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii). இந்த படகினை குத்தகைக்கு வழங்குவதுடன் தொடர்புடையதாக தயாரிக்கப்பட்ட உடன்படிக்கைகளில் இரு சாட்சியாளர்கள் மற்றும் சபையின் தலைவர் கையொப்பமிட்டிராத காரணத்தால் நிபந்தனைகள் மீறப்படல் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க முடியாதிருந்தது.

**3.5.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பல்வேறு நிறுவனங்களால் சபைக்கு வழங்கப்பட்ட 12 வாகனங்களின் உரித்தினை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பல்வேறு பணிகளுக்காக பயன்படுத்தப்படும் காணிகள் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் சபைக்கு சுவீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 பெறுகைகள்

### 3.6.1 பெறுகைகள் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதி வெளியிடப்பட்ட தேசியப் பாதீட்டுச் சுற்றறிக்கையின் இலக்கம் 128 இன் பிரகாரம் சபையினால் 2017 ஆம் ஆண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டின் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 3 சதவீதம் முதல் 81 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் ஏற்பட்டமையினால் பாதீடு சிறந்த முகாமைத்துவக் கட்டுப்பாட்டு கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமையும் கட்டுப்பாடும்

கீழே காண்பிக்கப்படுகின்ற முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் சபை விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| முறைமைகள் | கவனம் செலுத்தப்பட வேண்டிய துறைகள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | - i. நிலுவை வருமானத்தை அறவிடாமை<br>ii. உப விதிகள் விதிக்கப்பட்டிராமை.<br>iii. வருமான மூலங்கள் இனங்காணப்படாமை. |
| (ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு | - பாதீட்டை சரியானதாகத் தயாரிக்கப்படாமை. |
| (இ) களஞ்சிய நிர்வாகம் | - பொருட்களைக் களஞ்சியப்படுத்தல் உரிய முறையில் இடம்பெறாமை. |
| (ஈ) சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்களின் உரித்து கையேற்கப்படாமை. |
| (உ) கணக்கீடு | சொத்துக்கள் கணக்கு வைக்கப்பட்டிராமை. |